1975 மார்ச் 25]

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன இந்தக் கமிட்டியில் சாதாரணமாக பஸ்ஸிலே பயணம் செய்பவர்கள் ஒருவர் கூட இருப்பதாகத் தெரியவில்லை. அதிலே இருப்பவர்கள் மொத்தமாகவோ அல்லது தனித்தனியாகவோ அரசு எக்ஸ்பிரஸ் பஸ்களிலே போய்ப் பார்த்திருக்கிறார்களா? அப்படிப் போய்ப் பார்த்திருந்தால் தெரியும். எம். எல். ஏ.க்களுக்குப் பாஸ் இருந்தும் கே. பி. டிராவல்ஸ்-இல்தான் அதிகமாகப் பயணம் செய்கிறார்கள். அத்தகைய வசதிகளை அரசு எக்ஸ்பிரஸ் பஸ்களிலேயும் செய்வதற்கு இந்தக் குழு பரிசீலித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினரர்கள் அப்படித்தான் செல்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. அரசுப் பேருந்துகளிலும் அவர்கள் பயணம் செய்கிறார்கள். நான் இதிலே ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். மேனேஜ்மென்ட், நிர்வாகத்தினுடைய மேம்பாட்டிற்காக ஆலோசனை கூற இந்த எக்ஸ்பர்ட் கமிட்டி. பயன்படுத்துபவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு பஸ்களில் வசதிகளை அதிகரிப்பதற்காக ஏற்கனவே போக்குவரத்துக் கழகத்தில் users' councils என்ற முறையில் உருவாக்கச் சொல்லியிருக்கிறோம். அதே நேரத்தில் அரசாங்கம் முதல் போடுவதால், அரசாங்கத்தின் அந்த முதலுக்கு அங்கீகரிக்கின்ற சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களைக் கொண்ட Consultative Committee to the Ministry என்ற வகையில் சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்கள் அரசாங்கத்தோடு சேர்ந்து விடுகிறார்கள். இந்த மூன்று வகையான முனைகளிலேயும் பொதுமக்களின் குறைகளைப் போக்கவும், அதேநேரத்தில் பொதுமக்களின் பணமும், அதே நேரத்தில் நிர்வாக மேம்பாடும் சீராக மேற்கொள்ளப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டு, இருக்கின்ற எல்லாவகையினரின் ஆலோசனைகளும் பெறப்படுகிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) அறிவிப்புகள்.

(அ) சட்டக்கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர் தாக்கப்பட்டது குறித்து ஒத்திவைப்புத்தீர்மானம்—ஆய்வு ஒத்திவைக்கப்படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. கோவை செழியன் அவர்களும், சட்டக்கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்கள் தாக்கப்பட்டது

குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். அது நாளை மறுநாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் குறித்து மேலவைத் தலைவர் அனுப்பியுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1975–ம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/75), 3—3—1975–ஆம் நாளன்றும், தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/75), 22—3—1975–ஆம் நாளன்றும் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

மேலும், கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகள், 22—3—1975–ஆம் நாளன்று மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, திருத்தம் ஏதுமின்றி, ஒப்புதலளித்து நிறைவேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு, கடன்பட்ட விவசாயிகள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/75).

2. தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 49/74).

(முற்பகல் 10.00.)

(3) தகவல் கோரல்.

(அ) அறிவிக்கை கொடுக்கப்பட்ட சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள்மீது உறுப்பினர்கள் தகவல் கோரல்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சட்டக் கல்லூரி விடுதியில் நேற்று இரவு மாணவர்கள் தாக்கப்பட்டு 50 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். அப்பேர்பட்ட நிலையைப் பற்றிக் கண்டிப்பாக................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி தகவல் கேட்டிருக்கிறோம், இன்னும் தகவல் வரவில்லை என்று அரசுத் தரப்பிலிருந்து கூறியிருக்கிறார்கள். இதை விவாதிக்க எடுத்துக் கொள்ள